**மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையம், கடலூர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

முன்னிலை : திரு. தி. பாலமுருகன், எம்.எஸ்.ஸி
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்

இருப்பிடம் : கடலூர்

**செயல்முறை ஆணை எண்:அ1/123/2019 நாள்:31.07.2019**

பொருள்: பணியமைப்பு – கடலூர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையம் - செல்வி. பா. கவிதா, தட்டச்சர் - பணிவரன்முறை – 19.10.2017 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதம் எண்:5662/PSD/A2/2017 நாள்:03.10.2017
2. இணை இயக்குநர், (வேலைவாய்ப்பு), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்:நிர்2/21685/2017 நாள்:12.10.2017
3. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையம், கடலூர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:அ1/90/2017 நாள்:19.10.2017

<<>>

**ஆணை:**

கடலூர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மைய அலுவலகத்தில் தட்டச்சராகப் பணியாற்றும், செல்வி. பா. கவிதா, என்பவர் முன்னாளில் பார்வை 1, 2 மற்றும் 3-ல் காணும் ஆணைகளுக்கு ஏற்ப சென்னை தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்திய 2015-2016-ம் ஆண்டிற்கான போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்று, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடித எண்.5662/PSD/A2/2017 நாள்:03.10.2017-ன்படி தொகுதி IV-ல் அடங்கிய தட்டச்சர் பதவிக்காக தெரிவு செய்யப்பட்டார்.

சென்னை 32, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை வேலைவாய்ப்பு பிரிவு இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின்ன செயல்முறை ஆணைகள் நிர்2/21685/2017 நாள்:12.10.2017-ன் படி கடலூர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மைய அலுவலகத்தில் தட்டச்சர் பதவியில் தற்காலிக நியமனம் செய்யப்படுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு காலியாக உள்ள பணியிடத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையம் கடலூர் அவர்களின் செயல்முறை ஆணைகள் அ1/90/2017 நாள்:19.10.2017-ன்படி 19.10.2017 முற்பகல் தட்டச்சராகப் பணியில் சேர்ந்தார்.

இவருடைய தற்காலிக பணியானது, தமிழ்நாடு சார்நிலைப் பணி அமைச்சுப் பணியாளர் பணி நியமன விதிகளின் படி 19.10.2017 முற்பகல் அன்று தற்காலிக பணிவரன்முறைச் செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

இப்பணியாளரின் பணிவரன்முறை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளைகளில் இப்பணிநியமனம் தொடர்பாக தொடரப்பட்டுள்ள வழக்குகளின் மீது பிறப்பிக்கப்படும் இறுதி ஆணைகளுக்கு கட்டுப்பட்டதாகும்.

இவர் 19.10.2017 முற்பகல் முதல் தொடரும் மூன்றாண்டுகளில், இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். மேலும் இவர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகுதிக்காண் பருவக் காலத்திற்குள், தட்டச்சர் தகுதிக்காண் பருவத்திற்கு வரையறுக்கப்பட்ட தேர்வான, தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வித்துறையால் நடத்தப்படும் Computer on Office Automation தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

31/7/19

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான
பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையம்,
கடலூர்

பெறுநர்

செல்வி. பா. கவிதா,
தட்டச்சர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான
பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையம்,
கடலூர்

நகல்: பணிப்பதிவேடு